பாடம் 1

# மீன் பிடிக்கச் செல்லுதல்

***எப்போதாவது நீ மீன்பிடித்திருக்கிறாயா? அல்லது யாரேனும் மீன்பிடிப்பதைப் பார்த்திருக்கிறாயா? வெகுகாலத்திற்கு முன்னே புதியமுறையில் மீன்பிடிப்பது எப்படி என்பதை நான்கு பேர் கற்றுக்கொண்டார்கள்.***

கெனேசரேத்துக் கடலிலே பேதுருவும் அவன் சகோதரன் அந்திரேயாவும் இரவு முழுவதும் மீன்பிடிக்க முயற்சித்தும் ஒரு மீன்கூட அகப்படவில்லை. எனவே, இருவரும் தங்களது வலைகளைக் கடலிலிருந்து இழுத்துப் படகினுள் போட்டுக்கொண்டார்கள். கரையைநோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

ஏராளமான மக்கள் கரையிலே இயேசுவைச் சூழ்ந்து நிற்பதைக் கண்டார்கள். மக்கள் கூட்டம் கூடிக்கொண்டே வந்தது.

அவர்களது படகைக் கண்டதும் இயேசு படகை நோக்கி வந்தார். படகைக் கரையிலிருந்து சற்று, கடலுக்குள் தள்ளிவிடுமாறு பேதுருவிடம் கேட்டுக்கொண்டார். பின்னர் அந்தப் படகில் ஏறி அமர்ந்தார். கரையிலிருந்த மக்களுக்குப் பிரசங்கிக்கத் தொடங்கினார். “தம்மேல் மக்கள் நம்பிக்கை வைத்தால் அவர்களுக்குப் பரலோகில் இடம் உண்டு” என்றார்.

இயேசு, மக்களிடம் பேசி முடித்தபின் பேதுருவிடம், “வா, நாம் மீன்பிடிக்கச் செல்லுவோம்” என்றார்.

அந்திரேயா ‘திருதிரு’ வென விழித்தார். ஏன் தெரியுமா? உச்சியில் வெயில் அடித்துக்கொண்டிருந்தது. அந்த வேளையில் மீன்கள் எல்லாம் கடலின் ஆழத்தில் குளிர்ச்சியான இடத்திற்குச் சென்றுவிடும். எனவே, அப்படிப்பட்ட உச்சிவெயில் வேளையில் யாரும் மீன் பிடிக்கச் செல்லுவது கிடையாது. “இரவு முழுவதும் நாங்கள் மீன் பிடிக்க முயற்சிசெய்தோம்; ஆனால், ஒன்றுகூட அகப்படவில்லை; இருப்பினும்



## மனன வசனம்

**என் பின்னே வாருங்கள்; உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்.**

**மத்தேயு 4:19.**

உம் சொற்படியே செய்கிறேன்'' என்றார் பேதுரு.

பேதுருவும் அந்திரேயாவும் தங்களது பெரிய வலையினைப் படகிலிருந்து வெகு தூரத்திற்கு வீசினார்கள். தண்ணீரில் வலை பொத்தென்று வீழ்ந்து மூழ்கியது.

திடீரென்று வலைமுழுக்க மீன்களால் நிறைந்தது. வலையினை நீருக்குமேல் எடுக்க முடியவில்லை. மிகுந்த சிரமத்துடன் தங்கள் பெலத்தை எல்லாம் ஒன்றுகூட்டிப் படகில் வலையைப் போட்டனர். திரளான மீன்களின் பாரத்தினால் படகே மூழ்கிவிடும் போலிருந்தது.

எனவே,பேதுருவும் அந்திரேயாவும் படகுக்கு அருகிலிருந்த யோவானையும் யாக்கோபுவையும் உதவிக்கு அழைத்தனர். வலையில் இருந்த மீன்களில் பாதியளவு மீன்களை எடுத்து யோவானின் படகில் போட்டனர். இப்போது இருபடகுகளும் சமஅளவு நிறையுடன்காணப்பட்டன. எனவே, அப்படகுகள் மூழ்காமல் கரைவந்துசேர்ந்தன.



"நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள்; நான் உங்களை மனிதர்களைப் பிடிக்கிறவர்களாக்குவேன்'' என்றார் இயேசு. அதாவது, இயேசுவைப்பற்றிப் பிறருக்குச் சொல்லும் வாய்ப்பை அவர்களுக்குத் தருவேன் என்றார்.

பேதுரு, அந்திரேயா, யோவான், யாக்கோபு ஆகிய நால்வரும் தங்கள் படகுகளைப் பார்த்தார்கள். இந்த அளவு அதிகமான மீன்களை அவர்கள் இதுவரையிலும் பிடித்ததே கிடையாது. இது ஓர் அற்புதம்தான். இந்த நிகழ்வு அவர்கள் நால்வரின் உள்ளத்தையும் தொட்டுவிட்டது. எனவே, அவர்கள் நால்வரும் இயேசுவைப் பின்பற்றத் தீர்மானித்தார்கள்.

எனவே, அவர்கள் அந்தப்

## செய்தி

**பிறரிடம் இயேசுவைப்பற்றிப் பேசும்போது, இயேசுவைப் பின்பற்றுகிறோம்.**

பெரிய மீன் குவியலையும் சிறு வயது முதலே மிகவும்மிகவும் விரும்பிச் செய்து வந்த தங்கள் தொழில், படகு, வலை யாவற்றையும் விட்டு விட்டு இயேசுவின் பின்சென்றனர். இயேசுவுக்கே தங்கள் வாழ்வில் முதலிடம் கொடுத்தனர்.

என் செல்லமே! இயேசுவைப் பற்றிப் பிறருக்குச் சொல்லும்போது, இயேசுவைப் பின்பற்றுகிறவர்களாகிறோம். இயேசுவைப்பற்றிஅறிய வேண்டியவரிடம் தேவன் நம்மை வழிநடத்துவார். நம்மையும் மனிதர்களைப் பிடிக்கிறவர்களாக்குவார்.

நீ மனிதர்களைப்பிடிக்க ஆயத்தமா இருக்கிறாயா? இயேசுவிடம் சொல்.

***செய்முறை:*** **நாம் இயேசுவைப் பின்பற்றினால் யாராக மாறுவோம்? இந்தக் கேள்விக்கான பதிலைக் கண்டுபிடிக்க, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளையும் எழுத்துகளையும் பொருத்தமாக இணைக்கவும். அதன்மூலம் கிடைக்கும் சரியான பதிலைக் கீழே உள்ள கோட்டில் எழுது.**




**பதில் 1**